Registered as a NewsPaper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம்: 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　பங்குனி 23　(05 - 04 - 1992)　ஞாயிற்றுக்கிழமை　ஓசை: 47

Y. M. C.P

## பயிற்சி ஆசிரியர்களுக்கும் விழாமுற்பணம்கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கும் பண்டிகை முற்பணம்வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. வட - கிழக்கு மாகாணஅமைச்சில் 5.3.92 இல் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப் பட்டது. மேலும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஆறு மாதச் சம்பள முற்பணம், இரண்டுவருட சம்பள முற்பணம், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை நிறுத்தும்படியும் பிரதேசக் கல்வி அலுவலகங்களுக்குப் பணிக்கப் பட்டுள்ளது. பிரதேச கல்வி அலுவலகக் கணக்காளர் தேவையான பணம் குறித்துக் கணக்கைச் சமர்ப்பித்த பிறகு திறைசேரியிலிருந்து சட்டு நிதிக்கான அனுமதியைப் பெற்று மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் தொடரும் யுத்தம்:

# அரசு எதிர்கொள்ளும் நெருக்கடி

### செயலகத் திறப்பு

இடம் பெயர்ந்த தீவக மக்களின் நலன் காக்கும் கழகத்தின் தலைமைச் செயலகத் திறப்பு விழாவும், கலந்துரையாடலும் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற இருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர்களுடன் மங்கள முனசிங்கா பேச்சு

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா திங்கட்கிழமை முதல் அரசியல்கட்சிகளின் தலைவர்களோடு பேச்சுக்கள் நடத்தவுள்ளார். பிரதான அரசியல்கட்சிகளின் தலைவர்களு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சின்னச்சிப்பிக்குளத்தில் ஓர் இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா சின்னச்சிப்பிக்குளம் இராணுவமுகாம் அமைந்துள்ள பகுதிக்கு அண்மைய காட்டுப்பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கிய இராணுவ வீரரொருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

## புலிகள் - இராணுவம் செட்டிகுளத்தில் மோதல்

### இராணுவ அதிகாரி தகவல்

[கொழும்]

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்வதாகவும், செட்டிகுளம் பகுதியில் விடுதலைப் புலிகளோடு மோதல்கள் இடம்பெறுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

எந்தத் திசையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கேள்

வித்தார். இந்த நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர்

[ 4ஆம் பக்கம் பார்க்க]

## சிறிலங்கா பொருளாதாரம் சீர்கேடு

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் போரும், இதனால் அதிகரித்துள்ள இராணுவச் செலவீடும், அகதிகள் பராமரிப்புச் செலவீடும் சிறிலங்காவின் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளதாக சர்வதேச நிதி நிறுவனங்கள் கருதுவதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

மேலும் பெருந் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள நட்டங்களும், அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன நட்டத்தில் இயங்குவதும், பொருளாதார நெருக்கடியைத் தீவிரமாக்கியுள்ளதாகவும் தெரிவித்தது.

சிறிலங்காவில் அதிகரித்துவரும் செலவீடு உலக வங்கிக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. வடக்குக் கிழக்கில் இடம்பெற்றுவரும் போரும், போரினால் அதிகரித்துவரும் அகதிகள், அவர்களின் பராமரிப்புச் செலவு என்பனவே இக் கவலைக்குக் காரணம் என பி.பி ஸி. தெரிவித்தது

ஐ. தே. க. அரசாங்கம் கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தைஆதரிக்கிறது. வெளிநாட்டு மூலதனத்தை வருவிக்கிறது. அரச நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்பனை செய்கிறது. ஆனால் அரசாங்கத்தின் உடைமையான இரண்டு வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பன அரசாங்கத்துக்கு மட்டுமல்ல சர்வதேச நாணய நிதியத்திற்கும் கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விரு வங்கிகளும் முறையாக நடத்தப்படவில்லை. பலத்த நட்டத்தில் இயங்குவதாக கணக்காய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

ஏற்கனவே நட்டத்திலியங்கும் அரசாங்க தோட்டத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வேறு பகுதிகளுக்கு செல்ல திருமலை மக்களுக்கு தடை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் வேறுபகுதிகளுக்குச் சென்று வருவதை சிறிலங்கா படையினர் தடுத்துள்ளனர்.

அங்கு வாழும் மக்களுக்கென விசேடமாக அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவை வழங்கப்பட்ட பின்னரே வெளியே செல்ல அனுமதிப்பது குறித்து ஆலோசிக்கப்படும் எனவும் சிறிலங்கா படையினர் தெரிவித்துள்ளனர்.

### மட்டு, அம்பாறையில்

## உணவு முத்திரை வழங்க தமிழருக்கு வீண் தாமதம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உணவு முத்திரைகள் குறித்த காலத்தில் வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

எதுவித காரணமும் இன்றி இவ்வாறு செய்யப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் உரிய காலத்தில் உணவு முத்திரைகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர் ரஞ்சன் கொலையை

## பிரிட்டன் குழு விசாரிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

ரஞ்சன் விஜேரட்ணாவின் கொலை குறித்துப் பகிரங்க விசாரணை ஒன்று நடத்தும்படி எதிர்க்கட்சிகள் பிரிட்டனில் உள்ள ஒரு குழுவைக் கேட்டுள்ளன.

இக்குழு மிக விரைவில் சிறிலங்கா வர விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. போபால் விஷவாயுக் கசிவு தொடர்பான விசாரணையை இக் குழு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தது என்பது

# இரு காவலரண்கள் புலிகளால் தகர்ப்பு;

# இரு படை பலி: பலர் தப்பி ஓட்டம்



இடம்பெறுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

எந்தத் திசையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கேள்விக்கு விளக்கமாகப் பதில் கூற மறுத்த இராணுவப் பேச்சாளர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இருவாரங்களாக அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு இரவுநேர ஊடரங்கு மட்டுமே தற்போது அமுல் நடத்தப்படுவதாகவும் தெரி

# இரு படை பலி; பலர் தப்பி ஓட்டம்

## சடலம், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

பலாலி இராணுவ முகாமின் புன்னாலைக் கட்டுவனில் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 12 30 மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலொன்றை தொடுத்தனர்.

இத்தாக்குதலின் போது இரண்டு காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டதுடன் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஏனையோர் காயங்களுடன் முகாமிற்குள் ஒடித்தப்பிவிட்டனர்.

இறந்த ஒரு இராணுவத்தின் சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதுடன் ஆயுதங்களும், வெடிப் பொருட்களும், இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின்விபரம் வருமாறு

★ ரி-56-2ரகதுப்பாக்கிகள்-02
★ ரி-56 ரவைக்கூடுகள் -05
★ நடுத்தரரவைகள் -150
★ ஏ. கே. ஹோல்சர் -01
★ ராணுவ சப்பாத்து-1சோடி

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

### கப்டன் கண்ணன்

இம்மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் கண்ணன்(தர்மலிங்கம் அம்பிகைபாலன்சிறுப்பிட்டி நீர்வேலி) என்பவருக்கு தமிழீழவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



போபால் விஷவாயுக் கசிவு தொடர்பான விசாரணையை இக் குழு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகள் தரப்பில் இந்தக் கொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று மறுக்கப் பட்டது. ஜே. வி. பியும் கொலையில் தமக்குத் தொடர்பில்லை என்று மறுத்தது. ஆகவே இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்கவே இந்தக் குழுவை (எதிர்க்கட்சிகள் அழைத்துள்ளன என்று சொல்லப்படுகிறது.

# டைனமைட் திரிகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது

(கொழும்பு)

பக்கமுனையில் 16 டைனமைட் திரிகளுடன் ஒரு தமிழர் உட்பட ஐந்து இளைஞர்களை பொலிஸார் கடந்த புதன் கிழமை கைது செய்துள்ளனர்.

பக்கமுனையில் மகாவலி அபிவிருத்தி சபை ஒப்பந்தக்காரர் ஒருவரால் நடாத்தப் பட்டுவரும் சேகல எனுமிடத்தில் உள்ள கற்குழி ஒன்றிலிருந்தே இந்த டைனமைட்கள் திருடப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# தியாகச் சுடர் அன்னைபூபதி நினைவு நாள் நிகழ்வுகள்

தியாகச் சுடர் அன்னைபூபதி நினைவாக கைதடி வட்டவைப் பிரிவில் இன்று நாவற்குழிச் சந்தியில் அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை அடையாள உண்ணாவிரதமும் பிற்பகல் 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் பரா, கனகலிங்கம், சுந்தரி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# பயிற்சியற்ற படையுடன் யாழ். மோதல் கடினமாம்

சிறிலங்கா இராணுவ வீரர்கள் ஆயிரக்கணக்காக இருந்தாலும் போதிய பயிற்சியில்லாத இராணுவத்தால் யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலை முன்னெடுத்துச் செல்வது கடினம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்துவதையே இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா விரும்புகின்றார். இதேவேளை யாழ்ப்பாணத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல் மிகுந்த அழிவையே ஏற்படுத்தும் என்றும் பொதுமக்கள்,இராணுவ வீரர்களிடையே உயிரிழப்பு மிக அதிகமாக இருக்கும் என்றும் நம்பப்படுகிறது. எனவே புத்தியுடன் விவேகமும் மனிதாபிமானமும் சேர்ந்து இத்தகைய இராணுவ நடவடிக்கை குறித்துத் திட்டமிடவேண்டும் என்று கூறியிருக்கிறார் வட பகுதி இராணுவத் தளபதி ஜெனரல் கொப்பேகடுவ.

# தீவக இராணுவம் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நண்பகல் வேளையில் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்கள் இருமணிநேரம் மேற்கொள்ளப்பட்டது. நேற்று நண்பகல் ஒரு மணி முதல் ஊர்காவற்றுறை, காரை நகர்ப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே முகாம்களிலிருந்துஎறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.

மாலை நான்கு மணிவரை ஏவப்பட்ட இந்த எறிகணைகள் பொன்னாலை, மூளாய் திருவடிநிழல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

# யாழ். இளைஞர்கள் அம்மை நோயில் அவதி

(கொழும்பு)

கொழும்பு தனியார் விடுதிகளில் தங்கியுள்ள பல யாழ். இளைஞர்கள் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்குடன் கொழும்பு செல்லும் இளைஞர்கள் அங்கு அடிப்படை வசதிகளற்ற தனியார் விடுதிகளில் தங்கியுள்ளமை தெரிந்ததே.

அங்குள்ள விடுதிகளில் தங்கக்கூடிய அளவிலும் பார்க்க மிகக் கூடுதலானவர்கள் குறுகிய இடங்களுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இதனால் போதிய காற்றோட்டமோ சுகாதார வசதிகளோ இன்றி இவர்கள் தங்கியிருப்பதால் தற்போது இந் நோய்களுக்கு இலக்காகியுள்ளனர்.

வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள விடுதியொன்றில் தங்கியுள்ள அனைவரும் இந் நோய்க்கு இலக்காகி மூலைகளுக்குள் முடங்கிக் கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பதாக கொழும்பிலிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (ச)

# 10 வைத்திய அதிகாரிகள் விருப்பின் பேரில் இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் பத்து மருத்துவ அதிகாரிகள் வெளியேறிவெளி மாவட்டங்களுக்குச் செல்ல இருக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் முக்கிய வைத்தியசாலையில் இதுவரை கடமையாற்றி வந்த இவ்வைத்திய அதிகாரிகள் வெளிமாவட்டங்களில்நியமனம் பெறுவதற்கும் கடமையாற்றுவதற்குமுரிய நியமனக்கடிதங்களை பெற்று கொண்டு விட்டனர்.

இவ்வைத்திய அதிகாரிகள் விரும்பி விண்ணப்பித்துக் கொண்டதன் பெயரிலேயே இவர்களுக்கு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தற்பொழுதே வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவசேவை இவர்களின் வெளியேற்றத்தினால் மேலும் பாதிக்கப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் வன்முறைக்கு அரசாங்கம் தான் காரணம்

## —முன்னாள் பொலிஸ் அதிகாரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த தேர்தல்களின் போது, குறிப்பாக ஜனாதிபதி தேர்தலில் இடம்பெற்ற கொலைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் அரசு தான் காரணம், ஜே வி.பி பொறுப்பல்ல என்று இளைப்பாறிய மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குற்றச் சாட்டை நிரூபிக்கும் வகையில் புகைப்படங்களையும், ஆவணங்களையும் அவர் மனித உரிமைகள் அமைப்பிற்குச் சமர்ப்பித்துள்ளார். இவர் சத்தியக் கடதாசியையும் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல்களின்போது இடம்பெற்ற தேர்தல் ஊழல்களுக்கும், வாக்குச் சீட்டு மோசடி மற்றும் தேர்தல் அதிகாரிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமகளும் PROFESANALY QUALIFIED மணமக்களும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2414)

### உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

உரும்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை மாலை 3.30 மணிக்கு கோண்டாவில் குமரன் மைதானத்தில் திருமலை நட்சத்திரம் (நீலம்) அணியை எதிர்த்து பொற்பதி ஐ. க. விளையாட்டுக் கழகமும் றோயல் (ஏ) ஐ எதிர்த்து எவறெஸ்ற் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (2420)

### காரைக்காலில் வல்வெட்டித்துறை இளைஞர் கைது

(காரைக்கால்)

புதுவை மாநிலம், காரைக்கால் அருகே நிரவி என்னுமிடத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் கடந்த ஆண்டு வேதாரணியம் ஊடாக நாகபட்டினத்திற்கு வந்தவர் எனவும் திருச்சியில் தங்கியிருந்த இவர் பொலிஸ் கெடுபிடி காரணமாக காரைக்காலுக்கு சென்றார் எனவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இவருக்கும் புலிகளுக்குமிடையே தொடர்பு உள்ளதா என்பதுபற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அன்னைபூபதி நினைவு உண்ணாவிரதம்

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு இன்று காலை எட்டு மணிமுதல் சுன்னாகம் மேற்கு ஐயன்னா சன சமூக நிலையத்தினர் ஒரு நாள் உண்ணா விரதம் ஒன்றை நடத்தவுள்ளனர். பிற்பகல் இரண்டு மணி வரை நடைபெறும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மூன்று முப்பது மணியளவில் அன்னை பூபதி நினைவு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

★

அன்னை பூபதி நினைவாக மாசியம்பதி சூரியோதய சன

---

பாடம்: பௌதிகவியல்
அலகு: ஒளியியல் (93)
ஆசிரியர்: திரு. வர்ணம்
திகதி: 05 - 04 - 92
நேரம்: நண்பகல் 12.00 — 1.00

இடம்: யூனிவேர்சல்
கந்தர்மடம் (சி/4214)

---

பாடம்:- தாவரவியல்
அலகு:- தாவர உடற்றொழிலியல் (93)
ஆசிரியர்:- திரு. ஐங்கரநேசன்
திகதி:- 5- 4- 92
நேரம்:- பி. ப. 5.30 - 6.30

இடம்:- யூனிவேர்சல்
கந்தர்மடம் (சி/4215)

---

பாடம்:- விலங்கியல்
அலகுகள்:- 1) தொகுதிகள் (93)
2) பொருளாதார விலங்கியல் (92)
ஆசிரியர்:- திரு. நாகநாதன்
திகதி:- 5-4-92
நேரம்:- 1) 1. 30 - 2. 30 (93)
2) 5. 30 - 6. 30 (92)


இடம்:- யூனிவேர்சல்
கந்தர்மடம் (சி/4216)

---

பாடம்:- இரசாயனவியல்
அலகுகள்:- 1) இரசாயன சமநிலை- (92)
2) செறிவும் பீசமானமும் (அடிப்படை இரசாயனம்) (93)

---

## 75-ம் நாள்வீர அஞ்சலியும் நினைவு கூரலும்



### வீரவேங்கைசிவராம் கலைவேந்தன்

(வ. குணதீஸ்வரன் - குணம்)
கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்

அன்புப் புத்திரனாய் மண்ணின் மாவீரனாய்
03- 12- 1973 21-01-1992

தாயக விடுதலைக்கென தன்னுயிர் தந்தவன்-நீ
தரணி போற்றும் புலிவீரன் மரபில் நின்றவன்-நீ
போரிற்கும் அஞ்சாத புலிக்காளை -நீ
போகும் வழிதோறும் அரிச்சுவடு தந்தவன் -நீ
பொங்கிவரும் கண்ணீரை புலிவீரனே -உன்
பெயராலே அணைபோட்டு நினைவு கூரும்

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தாய், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள். (2416)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
20. 04. 1969

வீரச்சாவு
18. 03. 1991

---

## 1992ஆம் ஆண்டில் குடிசன மதிப்பு இல்லை

[கொழும்பு]

1991 ஆம் ஆண்டில் நடத்த வேண்டிய குடிசன மதிப்பீட்டு வேலைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அமைதியற்ற நிலையினால் 1992 ஆம் ஆண்டில்கூட நடத்தமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதென்று குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

91ஆம்ஆண்டு குடிசன மதிப்பீடுகளை நடத்துவதற்கான எல்லாஏற்பாடுகளும் திணைக்களம் செய்துள்ள போதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இருந்து வரும் அமைதியற்ற சூழ்நிலையினால் குடிசன மதிப்பீடு நடத்த முடியாது போய்விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

---

## முதலாவது ஆண்டுநினைவஞ்சலி



### வீரவேங்கை நளினி

வீரஜனனம் 04- 09- 1971
வீரச்சவு 19- 03- 1991

திதி:- 05. 04. 1992

மீசாலை என்னும் ஊரிலே பிறந்த புவனேஸ்வரி
நாட்டுப் பற்று மேவியே நின்றவள்
நளினி என்னும் நாமம் சூடினாள்
நம் தலைவனின் பாதையில் ஓடினாள்
வலிமையோடு சிலாபத்துறையிலே
வந்த பகைவரை எதிர்த்து மோதினாள்
மரணத்தையே மகிழ்ச்சியுடன் ஏற்கும்
மாவீரர் பட்டியலில் இவளும் ஆகிவிட்டாள்
பாசத்தின் பெட்டகமே பண்புமிகு மகளே
உன் முகம் காணாது நித்தமும் உனைத் தேடுகின்றோம்

நேசத்தால் உன் நினைவு நித்தமும்
எம்மை என்றும் வாட்டுதம்மா
ஓராண்டு சென்றாலும் உன் நினைவால்
நித்தமும் வாடுகின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

5. 4. 92 இன்று ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியை வைபவத்தில் உறவினர்களையும், நண்பர்களையும், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நகுலன் வீதி, மீசாலை வடக்கு, கொடிகாமம்.

இங்ஙனம்
அன்புப்பெற்றோர், சகோதரர்கள்
உறவினர்கள், நண்பர்கள். (2412)

நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

★

அன்னை பூபதி நினைவாக மாசியம்பதி சூரியோதய சன சமூக நிலையத்தினர் கடந்த 30 ஆம் திகதி முதல் தினமும் சுழற்சிமுறையிலான உண்ணா விரதம் அநுட்டித்து வந்துள்ளனர். இன்றும் காலை முதல் நடைபெறும் உண்ணாவிரதத்தின் இறுதியில் பிற்பகலில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பரிசளிப்பு விழா

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான புத்தூர் பிரதேச மட்ட பரிசளிப்பு விழா ஆவரங்கால் சிவன் கோயில் வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குநடைபெறவுள்ளது.

## சேவைக் கால பயிற்சி இடைநிறுத்தம்

யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான கோட்ட மட்டத்திலான மற்றும் மாவட்ட மட்டத்திலான சகல சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களும் காலவரையறையின்றி இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பயிற்சி வகுப்புக்களை இடை நிறுத்துவதற்கான உத்தரவு அடங்கிய சுற்று நிருபம் ஒன்று மாகாணக்கல்வி அமைச்சினால் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

எனினும் இச்சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)


2) சேதனவும் பீசமானமும் (அடிப்படை இரசாயனம்) (93)

ஆசிரியர்:- திரு. செல்வா

திகதி:- 5. 4. 92
நேரம்:- 1) 3. 30 — 4. 30 (92)
2) 2. 30 — 3. 30 (93)

இடம்:- யூனிவேர்சல்
கந்தர்மடம்

(சி. 4217)

பாடம்:- இரசாயனவியல்

அலகுகள் 1) பொது இரசாயனம் (93)
2) சேதனஇரசாயனம் (92)
3) பௌதிக இரசாயனம் (இரசாயன சமநிலை) (92)

ஆசிரியர்:- திரு. மகாதேவா

திகதி:- 5. 4. 92
நேரம்: 1) செவ்வாய், வியாழன் (விடுமுறை கால வகுப்பு)
4. 30 — 5. 30 (93)
2) சனி, ஞாயிறு
1 — 2 (92)
3) செவ்வாய், வியாழன்
8. 30 — 9. 30 (92)

இடம்: யூனிவேர்சல்
கந்தர்மடம்

நாகலிங்கம்
இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி

(சி/4218)




வீரச்சாவு

18. 03. 1991

## வீர வேங்கை மித்திரன்

(கந்தசாமி சிறிக்குமார்)

திதி 5. 4. 92

அண்ணலின் பாதையிலே
வீறு கொண்ட புலியாக
இலட்சியப் பாதையிலே
விடுதலைப் புலியாக
புறப்பட்டீர் போர்க்களத்தில்
மண்ணை நீர் நேசித்ததால்
எம்மை விட்டுப் பிரிந்து விட்டாய்
உன் இலட்சியம் ஈடேற
பிரார்த்திக்கிறோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(2417)


Computer Programming
in
BASIC Language

4 மாதங்கள்
திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 06. 04. 1992 10.30மணி

Lectures by: S. P. Sivapathasundaram
M. I. D. P. M (Lond)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

School of Business
Administration
(Pioneers in Computer Education).
16, 3rd Cross Street, Jaffna

(சி-/4224)


கொடிகாமம். உறவினர்கள், நண்பர்கள்.

(2412)

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 05

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு தாண்டியடியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப்- புவிராஜ்** (ரா. உதயதாசன் - கல்லடி மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு மட்டக்களப்பு கள்ளிச்சை வடமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். தேவன்** (புத்திரசிகாமணி சூரியகுமார்- ஏறாவூர், மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவனாகிய சுதுமலை வாசி

1989ஆம் ஆண்டு மன்னாரில் தேசவிரோத சக்திகளினால சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991ஆம் ஆண்டு அம்பாறை ஆலடி ஒழுங்கையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**ஈஸ்வரன்**

மட்டக்களப்பு / வாகரை 32ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் குமார்** (இளையதம்பி மோகனகுமார் - சந்திவெளி, மட்டக்களப்பு)

**லெப். மனோ** (முருகவெட்டை)

**2ஆம் லெப். கமலேஸ்** (மன்னம்பிட்டி)

**எட்வேட்** (மயிலவெட்டுவான், மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4223)

## சிந்தனைக்கு

உன்னைத் தவிர வேறெதுவும் உனக்கு அமைதியைத் தராது கொள்கைகளின் வெற்றியைத்தவிர வேறெதுவும் உனக்கு அமைதியைத் தராது.

— ராலீச்சப் வாலீடோ எமெர்ஸன்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 05-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

# சிறிலங்கா இராணுவத்தின் பழைய பல்லவி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்களிடம் தாம் பேச்சுவார்த்தையை விரும்புவதாகக் கூறி காலம் கடத்தும் முயற்சியில் புலிகள் ஈடுபடுகின்றனர். உண்மையாகவே புலிகள் சமாதானத்தை விரும்பினால் ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு பேச்சுவார்த்தைக்கு வரட்டும்' இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரியின் இவ் எதிர்பார்க்கை பதினைந்து வருடமாக ஆயுதப் போராட்டம் நடத்தும் விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தை நடத்த ஓர் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது போலவும் இச்சந்தர்ப்பத்தை விடுதலைப் புலிகள் தவறாது பயன்படுத்திக் கொள்வதிலேயே அவர்களின் எதிர்காலம் உள்ளது போலவும் உள்ளது வேறொரு வகையில் கூறுவதானால் நரி-காக்காய் கதை போன்று உள்ளது அதாவது வாயில் வடையுடன் இருந்த காக்கையைப் பார்த்து நரி கூறியதாம் உனது பாட்டு இனிமையானது எனக் கேள்விப்பட்டுள்ளேன். ஒருமுறை பாடு பார்க்கலாம் என்று. இராணுவ அதிகாரியின் கூற்றும் அவ்வாறேயுள்ளது

தமிழர்தேசிய இனப்பிரச்சினைக்குஆயுதப்போராட்டம் ஒரு வழியெனத் தீர்மானிக்கப்பட்டமை ஓர் எழுந்தமான அவசரப்பட்ட முடிவல்ல நீண்டகால அகிம்சைப் போராட்டங்களின் பின்பும், சிங்கள அரசியல்வாதிகளினால் தமிழர் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதன் விளைவே ஆயுதப் போராட்டமாகும். சுமார் 30 வருடங்களுக்கு மேலான அகிம்சை வழி முறைகள் தோல்வி கண்டதன் பின்பே ஆயுதப் போராட்டம் உருப்பெற்று வளர்ந்தது.

இவ் ஆயுதப் போராட்டம் இன்றுள்ள ஓர் உயர்ந்த நிலையை அடைவதற்கு ஆயிரக்கணக்கில் விடுதலைப் புலிகளும், பொது மக்களும் தமது இன்னுயிரை ஈர்த்துள்ளனர், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமடைந்துள்ளன. இதேவேளை இவ் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழரின் உரிமைகளையும், தமிழரையும் அழித்தொழிக்க முற்பட்ட சக்திகளின் முயற்சிகள் பல முறியடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். ஒப்படைக்க வேண்டும் என விடுக்கப்படும் முதலாவது கோரிக்கையுமல்ல இது. சிறிலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும், இரு நாடுகளின் அரசாங்கங்களும், இது குறித்துப் பலதடவை கோரிக்கையும் விடுத்தும் வந்துள்ளன ஆனால், இக்கோரிக்கைகள் எவையும், தமிழரின் தேசிய இனப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தின் பின்னர் விடுக்கப்படவில்லை. பல முறை இவ் அரசாங்கங்கள் இராணுவநடவடிக்கைகள் மூலம் தீவிரமுயற்சி செய்துதோல்வி கண்டபின்னரே விடுக்கப்பட்டன. அதாவது முயற்சிகள் கைகூடாத நிலையில் விடுக்கப்பட்டன. அத்தோடு இவை எப்பொழுதும் சமாதான ரீதியில் ஓர் நேர்மையான இதய சுத்தியுடன் விடுக்கப்படவில்லை ஓர் மிரட்டலாகவே விடுக்கப்பட்டு வந்துள்ளன.

# இந்தியாவின் இரட்டை வேட அணுகுமுறை பர்மாவில் ஆட்சியாளருக்கு துணைபோகிறது

— ஜேம்ஸ் வால்ஷ்

கடந்த டிசம்பர் மாதம் முதல் சுமார் ஒரு லட்சத்து எழுபத்தையாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் அகதிகளாக பர்மாவிலிருந்து பங்களாதேசுக்குள் புகுந்துள்ளனர். முஸ்லிம் சிறுபான்மையினர் மீது இராணுவ ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்திருக்கும் வன்முறையே இந்த அகதிகள் வெளியேற்றத்திற்கு காரணமாகும்.

ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஆன்-சாங்சூயியை வீட்டுக் காவலில் தொடர்ந்து தடுத்து வைத்திருக்கும் பர்மிய இராணுவ அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளால் அயல் நாடுகளுடனும் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் பர்மாவின் நிலைமைகள் குறித்து 'டைம்ஸ்' இதழில் வெளியான கட்டுரையின் மொழி ஆக்கத்தின் ஒரு பகுதி இது.

இராணுவ ஆட்சியாளர் கரந்தடிப்படையினருக்கு எதிரான போரை தீவிரப்படுத்தி உள்ளனர். இந்நடவடிக்கையினால் எல்லைகளில் அமைதியின்மை ஏற்படுகிறது.

காரென (Karen) கரந்தடிப் படையினர் அந்தக்குன்றை 'சிலிப்பின் டோக் றோக்' (Sleeping Dog Rock) என்றழைக்கின்றனர். அதாவது தூங்கும் நாய்க்குன்று எனப் பொருள்படும். ஆனால் பர்மிய இராணுவ ஆட்சியாளர்கள் இக்குன்றை நிம்மதியாக இருக்க விட விரும்பவில்லை. தாய்லாந்து (Thailand) எல்லையிலுள்ள இந்த மலையின் மேற்குப் பக்கமாக ஏறி இம்மலையைக் கைப்பற்றும் நோக்குடன் அரச படையினர் சென்ற வார முற்பகுதியில் நடவடிக்கையில் இறங்கினர். காரென் கரந்தடிப் படையினரின் தலைமையகம் மானெப்புளோ (Manorplaw) வில் உள்ளது இந்த மலை உச்சியைக் கைப்பற்றினால் காரென்களின் தலைமையகத்துக்குப் போகும் வழி சுலபமாகிவிடும் இதனால் காரென் கரந்தடிப் படையினரையும் அவர்களைப் போன்ற பிற கிளர்ச்சி அமைப்புகளையும் அழிக்க முடியும். இக் கிளர்ச்சியாளர்கள எல்லோரும் ஆசியாவிலுள்ள அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரசுகளில ஒன்றான பர்மிய அரசை வீழ்த்துவதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். அரச படைகளின் முன்னேற்றம் தடைப்பட்ட போதும் றங்கூன் அரசின் தாக்குதல்கள் பர்மாவில் உள்ள கிளர்ச்சியாளர்களை கடுமையாகப் பாதித்துள்ளது இதனால் புத்தர் மதத்தைக் கடைப்பிடிக்கும் நாட்டிலிருந்து அகதிகள் பர்மாவின் அயல் நாடுகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். பர்மிய அரசின் கெடுபிடிகள் எல்லைக்கப்பாலும் பரவுவதால் அயல்நாடுகள பயமடைகின்றன.

சென்ற மாதம் பர்மிய இராணுவ ஆட்சிக் குழுவினர் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களை முற்றாக முறியடிக்கும் நோக்குடன் புதிய ரக ஆயுதங்களுடன் படைப்பலத்தையும் கூட்டியுள்ளனர். கிழக்கில் மானெப்புலோ பக்கமாக தாக்கும் அதே வேளையில் வடக்கில் நாகர் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலும் இரண்டு பர்மிய பட்டாலியன் படை அணியைச் சேர்ந்த படையினர் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக 1600 நாகர் பழங்குடி மலைவாழ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குள் புகுந்துள்ளனர் மேற்கில் கடற்கரைப் பிரதேசமான அரக்கனிலிருந்து (Arakan) 75 000 றொகின்யா (Rohingya) முஸ்லிம்கள் 55,000 அரச படையினரின் கொடுமைகளால் அகதிகளாக்கப்பட்டு பங்களா தேசத்திற்குள் சென்றுள்ளனர். கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை அத்துடன் மதத்துவேசம் ஆகியவற்றில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என்று அகதிகள் கூறுகின்றனர்.

இராணுவம் திட்டமிட்டு நாட்டில் இனத்துவேசத்தைப் பரப்புகின்றது என்றார் பர்மிய இனவாரியான கிளர்ச்சிகளைப் பற்றி நன்கறிந்த பிரித்தானிய நிபுணரான மார்ட்டின் சிமித் (Martin Smith) அவர்கள், 1988 இல் நடந்த அதிரடிப்புரட்சியின் பின் இராணுவத்தின் புலனாய்வுத் துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் கின் நியூன்ட் (Khin Nyunt). இரண்டு ஆண்டில் கிளர்ச்சியாளர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று அறைகூவல் விடுத்தார். சென்ற ஆண்டு அரசபடையினருக்கு சிறு முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், அரச படையினருக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. இத்தாக்குதல் நடவடிக்கைகளில் காரென் கிளர்ச்சியாளர்கள் முன்னணியில் திகழ்வதோடல்லாமல பர்மாவின் மத்தியிலுள்ள ஐராவதி (Irrawady) ஆற்றின் கழிமுகப் பகுதியையும் தாக்கினர். தங்கள் நாட்டை மியன்மார் (Myanmar) என அழைக்கும் படி கோரும் இந்தப் பர்மிய இராணுவத் தலைவர்கள் தங்களைச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சபை (SLORC) எனக் கூறிக்கொள்ளுகின்றனர், அத்துடன் தங்கள் எதிர்ப்பாளர்களைப் பழி வாங்கும் நோக்குடன் தங்கள் திட்டங்களைத் தீட்டுகின்றனர். இந்த அரசு தங்களை மதிக்குமாறு கோருகின்றது. கிளர்ச்சியாளர்களை அடக்குவதன் மூலம் இந்த மதிப்பைப் பெற நினைக்கின்றது. என்கிறார் றங்கூனிலிருந்த முன்னாள் அமெரிக்கத் தூதுவர் பேர்ட்டன் லெவின் அவர்கள்,

இவர்களால் அயல்நாடுகளிலிருந்து மதிப்பைப் பெறமுடியாமல் உள்ளது ஒருபில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஆயுதங்கள் தாங்கிகள், கண்காணிப்புப் படகுகள், ஜெற்போர் வானூர்திகள் ஆகியவற்றைச் சீனா றங்கூனுக்குக் கொடுத்துதவுகின்றது இந்தச் சீன பர்மிய உறவை இந்தியா சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றது. இத்தருணத்தில் பர்மிய இராணுவத்தினர் பங்களாதேச நாட்டின் எல்லைப்புறக் காவல் அரணைத் தாக்கி ஆயுதங்களைக் கவர்ந்து சென்றதோடல்லாமல். பங்களாதேசத்தின் இராணுவ வீரர் ஒருவரையும் கொன்றுள்ளனர், இது தற்செயலாக அடையாளங்காண முடியாத சூழ்நிலையில் ஏற்பட்ட சம்பவம் என்று பர்மிய இராணுவ ஆட்சிபீடம் கூறியபோதிலும், பங்களாதேச அரசு இன்னும் இப்படி எத்தனை நடவடிக்கைகள் நடக்கப்போகின்றது என அங்கலாய்க்கின்றது. றங்கூன் அரசு தனது தென்கிழக்காசிய அயலவர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தாலும் தற்போது எல்லைமீறி நடக்கும் நடவடிக்கைகளினால் பர்மாவின் மேற்குப் பக்கத்தில் உள்ள உபகண்டத்தில் அகதிகளின் வருகையினால்பதற்றம் ஏற்படுகின்றது.

சென்றவாரம் பர்மிய இராணுவத்தினர் காரென் கிளர்ச்சிகளில் முக்கியமான இரண்டு முகாம்களைக் கைப்பற்றிய தோடல்லாமல் லோங்காய் (Longkai) இலுள்ள நாகா கிளர்ச்சியாளர்களின் இராணுவத்தலைமையகத்தையும் கைப்பற்றியுள்ளர்ன. இப்படி இராணுவம் முன்னேறியிருந்தவேளையில் இந்திய ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் அவர்களிடம் புதிய பர்மியத் தூதுவர் தனது பதவிப் பத்திரங்களைக் கையளித்த போது, பர்மாவின் மனித உரிமை மீறல்களையிட்டு கவலைதெரிவித்தார். அத்துடன் பர்மாவில் விரைவாக சனநாயகம் வளர சுமுகமான சூழ்நிலை உருவாகவேண்டுமென்று இந்தியா விரும்புமதாகத் தெரிவித்தார். ஜனாதிபதி வெங்கட்ராமன் மேலும் ஒரு படி போய் நோபல்பரிசு பெற்ற திருமதி ஆவ் சான் சூகீயின் தனித்துவமான தலைமைத்துவத்துக்கும், அவருக்கு அமைதிவழிப் போராட்டத்தில் உள்ள நம்பிக்கைக்கும் புகழாரம் சூட்டினார். 1988ல் ஜனநாயகம் பர்மாவில் வளர வேண்டுமென்று மக்களின் எழுச்சி ஆர்ப்பாட்டங்களுக்கு சூ கீ. தலைமை வகித்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டங்களை அடக்க இராணுவ ஆட்சி எடுத்த தீவிர நடவடிக்கைகளின் போது 300 பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 1989 ம் ஆண்டு தொடக்கம் திருமதி சூ.கீ. வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்கள் தற்போது தங்கள் கவனத்தை சிறுபான்மை இனத்தவர்கள் பக்கம் திசை திருப்பி உள்ளனர். பர்மாவில் சிறுபான்மை இனத்தவர்களுக்கெதிரான கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுவது காலம் காலமாக நடந்துவரும் நிகழ்ச்சியாகும். நீ.வின் (Ne win) பர்மாவின் சர்வாதிகாரியாக 1962ல் இருந்த பொழுது 300,000 இந்தியர்களை அகதிகளாக இந்தியாவுக்குக் குடிபெயரச் செய்தார். அத்துடன் சிறுபான்மையினரான சீனர்களுக்குகெதிராகக் கலவரங்களை உருவாக்குவதில் ஈடுபட்டார். அரகனில் 1978ம் ஆண்டு நடந்த அடக்குமுறைகளினால் 300,000 முஸ்லிம் பங்களாதேசிற்கு அகதிகளாகச் சென்றனர். இந் நடவடிக்கை மீண்டும் முனைப்புடன் தொடங்கப் போகின்றது என்பது புலனாகின்றது. வரலாற்றுப் புகழ் பெற்ற அரகன் பண்டைய காலத்தில் தனி அரசாக இருந்தது. புத்தசமயத்தவர்கள் பெரும்பான்மையினராகவுள்ள பர்மாவில் அரகன் மாநிலம் ஒன்றில் தான் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். சென்ற டிசம்பரில் சிறுகச் சிறுக பங்களாதேச நாட்டுக்கு வந்த அரகன் முஸ்லிம் அகதிகள் தற்போது வாரத்துக்கு 3000 ஆக உயர்ந்துள்ளனர். இவர்களின் வருகை ஏற்கனவே வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ள கோக்சு பசார் (Cox's Bazaar) பண்டர்பான் (Bandarban) அகதிமுகாம்களை நிரப்பி வழியச் செய்கின்றது.

(தொடரும்)

# காவிரி நடுவர் மன்றத்தினால்

# அரபுக்களின் ஒற்றுமைக்கு லிபியா கோரிக்கை

பொழுதும் சமாதான ரீதியில் ஓர் நேர்மையான இதய சுத்தியுடன் விடுக்கப்படவில்லை ஓர் மிரட்டலாகவே விடுக்கப்பட்டு வந்துள்ளன.

மேலும், விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் ஏன்பேச முற்படுகின்றது தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும், தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்என்பதற்காகவா? அவ்வாறானால் கடந்தகாலத்தில் தமிழ்த்தலைவர்கள் பேசத்தயாராக இருந்தபோது, அல்லது அவர்களுடன் பேசியபோது தீர்வைக் கண்டிருக்கலாமே. ஆனால் அவ்வாறு எதுவுமில்லை. விடுதலைப் புலிகள் ஆயுதத்துடன் இருக்கின்றார்கள், பலமாக இருக்கின்றார்கள் இதனால் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணப்பட வேண்டும் ஏனெனில் அதற்குப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும் என்பதினாலாகும். இதைவிடுத்து விடுதலைப்புலிகள் மீதுள்ள பற்றினையோ அன்றி தமிழர் இலங்கைத்தீவின் ஒரு பிரசை என்பதினாலோ அல்ல, தமிழர் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என சிறிலங்கா அரசாங்கம் கருதுமானால், இலங்கையைவிட்டு ஆங்கிலேயர் வெளியேறிய காலத்திலேயே தீர்த்து வைத்திருக்கலாம். இலங்கையின் அபிவிருத்தியைக் கட்டி எழுப்பியிருக்கலாம் ஆனால். அன்று அவ்வாறு அவர்கள் செய்யவில்லை ஏன் செய்யவில்லை? தமிழர் அன்று பலமாக இருக்கவில்லை. தமிழருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித் தெறியப்பட்டபோதும், தமிழர் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோதும் தமிழர் தமது எதிர்ப்பை காட்ட பலமாக இருக்கவில்லை. இதனால் தமது விருப்பத்திற்கு நடவடிக்கைகளை சிங்கள அரசாங்கங்கள் மேற்கொண்டு சென்றன.

ஆனால். இன்று நிலைமை அவ்வாறு இல்லை. புலிகள் - தமிழர்கள்-பலமாகவுள்ளார்கள் இதனால் தமிழரை ஏமாற்றமுடியாமல் இருக்கிறது. ஆக்கிரமிப்பை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. இதற்கு புலிகளின் ஆயுத பலமே துணையாக உள்ளது. இந்நிலையில், ஆயுதங்களைப் போடுங்கள். பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எனக் கதை சொல்லிப் பார்க்கின்றது சிறிலங்கா அரசாங்கம்.

கொழும்பில் இருந்து வரும் நல்லெண்ணத் தூதுக் குழுக்களிடம் மட்டும் தமது சமாதானத்திற்கான விருப்பத்தைப்புலிகள் தெரிவிக்கவில்லை. 1991 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே பேச்சுவார்த்தைக்கான கோரிக்கையை விடுதலைப்புலிகள் விடுத்து வருகின்றனர். விடுதலைப் புலிகள் ஏனைய குழுக்களைப் போல் கையாலாகாத்தனத்தினால் எப்பொழுதும் சமாதானம் பேசுவதில்லை சமனான நிலையிலேயே சமாதானம் பேச விரும்புகின்றனர் இதை விடுத்து ஓர் திணிப்பு நெருக்குதல் மத்தியில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்படுவார்கள் என சிறிலங்கா எண்ணுமேயானால் அது எப்போதும் ஓர் தவறான கணிப்பீடாகவே இருக்கும்.

# காவிரி நடுவர் மன்றத்தில் கர்நாடகத்தின் மனு நிராகரிப்பு

(சென்னை)

காவிரி நதிநீர் தொடர்பாக நடுவர் மன்றத்தின் உத்தரவை மறுபரிசீலனை செய்யும்படி கர்நாடக அரசு தாக்கல் செய்த மனுவை காவிரி நடுவர் மன்றம் நிராகரித்து விட்டுள்ளது.

தண்ணீர் குறைவான காலங்களில் பற்றாக்குறையை இரு மாநிலங்களும் சரிசமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் காவிரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்கள் அளித்த மனுவின்படி மாநிலங்களுக்கிடையேயான நீர்த்தாவா சட்டத்தின் கீழ் நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டது. என்றும், 250 டி. எம். சி தண்ணீரை மேட்டூருக்குவிடுவதால் கர்நாடக மாநிலம் பாதிக்கப்படாது என்றும் நடுவர் மன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

கிருஷ்ணா நதிநீர் நடுவர் மன்றம், நர்மதா நதிநீர் நடுவர் மன்றம் என்பவற்றின் தீர்ப்புக்களையும் மேற்கோள் காட்டியுள்ள காவிரி நடுவர் மன்ற நீதிபதிகள் கர்நாடக மாநில அரசின் கோரிக்கையை நிராகரித்துத் தீர்ப்பளித்துள்ளனர்.

## கருணாநிதியின் பெயர் ஜெயலலிதா அரசால் நீக்கம்

(சென்னை)

தமிழகத்தின் பாஞ்சாலக் குறிச்சிக் கோட்டையில் பிரதான நுழை வாயிலில் சூட்டப்பட்டிருந்த தி மு க. தலைவர் மு. கருணாநிதியின் பெயர் நீக்கப்பட்டுள்ளது

இத்தகவலை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மாநில சட்டப் பேரவையில் அறிவித்தார்.

இக் கோட்டையில் பிரதான நுழை வாயிலில் வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் பெயர் எம். ஜி ஆர். ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்டது. தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் கருணாநிதியின் பெயர் வைக்கப்பட்டது. ஆகவே தற்போது அந்தப் பெயரை நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## ராவின் அறிக்கைக்கு அத்வானி மகிழ்ச்சி

(டில்லி)

போபர்ஸ் பிரச்சினை தொடர்பாக பிரதமர் பி. வி நரசிம்மராவ் வெளியிட்ட அறிக்கை பாராளுமன்றத்துக்கு குறிப்பாக எதிர்கட்சிகளுக்கு ஒரு வெற்றி என்று எதிர்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி பாராளுமன்றத்துக்கு வெளியில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனதா தள் தலைவர் எஸ். ஆர். பொம்மை கேட்டுள்ளார்.

## ராஜீவிற்கு சுவிஸ் வங்கியில் 4625 கோடிரூபா இருந்ததா?

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி சுவிஸ் வங்கியில் சுமார் 4,625 கோடி ரூபா பணம் வைப்புச்செய்திருந்தாரா என்று பாராளுமன்றத்தில்எதிர்க்கட்சிஉறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இது பற்றி அரசிடம் தகவல் எதுவும் இல்லை என்று மத்திய அமைச்சர் திருமதி மாகிறட் ஆல்வா பதிலளித்தார்.

## நாகலாந்து மத்திய ஆட்சியின் கீழ்

(டில்லி)

நாகலாந்து மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டு மாநில நிர்வாகத்தை இந்திய மத்திய அரசு பொறுப்பேற்று உள்ளது. பர்மாவுடன் எல்லையைக் கொண்டுள்ள இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்கேடு அடைந்திருப்பதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை இணையமைச்சர் எம் எம். ஜேக்கப் இந்தியப் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

## லிபியா கோரிக்கை

(திரிப்போலி)

அரபு நாடுகளுக்கு எதிராக மேற்கு நாடுகள் நடத்தும் திட்டத்தை முறியடிக்க அரபு நாடுகள் தமது நிதியாதாரங்களை ஒன்று திரட்டி கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இறங்க வேண்டும் என்று லிபியா கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு நாடுகளின் தாக்குதல் திட்டத்தை முறியடிப்பதன் மூலம்தான் அரபு நாடுகள் கண்ணியத்துடன் இயங்கி வருவது பற்றி தீர்மானிக்க முடியும் என்றும் லிபியா கூறியுள்ளது.

இதேவேளை திரிப்போலியிலுள்ள வெளிநாட்டுத் தூதுவரகங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு ஐ நா. பாதுகாப்பு சபை லிபிய அரசைக் கோரியுள்ளது.

## பர்மிய அகதிகள் விவகாரம்; பங்களாதேசிற்கு ஐ.நா உதவி

(டாக்கா)

பர்மிய அகதிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண பங்களாதேசத்திற்கு சகல உதவிகளும் வழங்கப்படுமென ஐக்கிய நாடுகள் சபை உத்தரவாதம் அளித்துள்ளது.

தற்போது டாக்காவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர் ஒருவர் பங்களாதேசப் பிரதமர் பேகம் காலிதா ஸியாவைச் நேரில் சந்தித்து ஐ நா.வின் இந்த உத்தரவாதத்தை தெரிவித்தார்.

இதேவேளை ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் பாதுகாப்பாக தமது தாயகம் திரும்புவதை உறுதிப்படுத்தும் வகையில் பங்களாதேச - பர்மிய எல்லையில் ஐ.நா.பாதுகாப்பு படையின் ரோந்து நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்படலாம் என்று ஐ.நாவின் விசேட தூதுவர் ஆலோசனை தெரிவித்தார்.

எனினும் இருதரப்பு பேச்சுக்கள் வாயிலாக பிரச்சனைக்கு தீர்வு காணவே விரும்புவதாக பங்களாதேசப் பிரதமர் பேகம் கலிதா ஸியா ஐ நா வின் விசேட தூதுவரிடம் கூறியதுடன் பர்மிய அரசின் மீதும் அதிகாரிகள் மீதும் குற்றஞ்சாட்டினார்.

ஐ.நா. விசேட தூதுவர் பர்மியத் தலைநகர் ரங்கூனுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

## தீ விபத்து

(சென்னை)

சென்னை ராயபுரம் பகுதியிலுள்ள திடீர்நகரில் நேற்று முன்தினம் மாலை தீவிபத்து ஏற்பட்டதில் நூற்றுக்குமதிகமான குடிசைகள் எரிந்து சாம்பராகின. தீவிபத்துக்கான உண்மையான காரணத்தை கண்டறியுமாறு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## தொழிற்கட்சி முன்னணியில்

(லண்டன்)

பிரித்தானியாவில் நடத்தப்பட்ட மூன்று வாக்கெடுப்புகளில் கன்சர் வேட்டிவ் கட்சியை விட எதிர்க்கட்சியான தொழிற் கட்சி முன்னணியில் இருப்பது தெரியவந்துள்ளது.

ஏப்ரல் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரித்தானிய தேர்தல்களின் பிரசாரப்பணிகளுக்கு இந்த வெற்றி திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்தலாம் எனவும் கூறப்படுகிறது.

ஈழநாதம்

அன்னை பூபதி நினைவாக

# குடாநாட்டில் பரவலாக கூட்டுறவாளர் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னைபூபதியின் நான்காம் ஆண்டு நினைவாக யாழ். மாவட்டக் கூட்டுறவாளர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதம் மற்றும் நினைவஞ்சலிக் கூட்டங்களை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்கு செய்து நடாத்தினர்.

காலை 9.00 மணியளவில் அடையாள உண்ணாவிரதம் ஆரம்பித்தது. பிற்பகல் 2.00 மணிவரை நடைபெற்ற இந்த உண்ணாவிரத நிகழ்ச்சியில் கூட்டுறவாளர்களும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

வலிகாமம் பிரிவில் நல்லூர் கைலாசபிள்ளையார்கோயில், கொக்குவில் முருகன் கோயில், புத்தூர் சிவன் கோயில், சுன்னாகம் சிவன் கோயில், வளக்கம்பரை அம்மன் கோயில் ஆகிய இடங்களிலும், தென்மராட்சிப்பிரிவில் நுணாவில் அம்மன் கோயிலடி, மிருசுவில் அந்தோனியார் கோயிலடி ஆகிய இடங்களிலும், வடமராட்சிப் பிரிவில் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடி, மந்திகை அம்மன் கோயிலடி ஆகிய இடங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அனைத்து இடங்களிலும் நூற்றுக் கணக்கானோர் பங்கு பற்றினர்.

## புகையிரத சேவைக்கு வருடம் 600மில். ரூபா நட்டம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் புகையிரத சேவைப் பகுதி வருடாந்தம் 600 மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும், இது நாட்டுக்கு ஒரு 'வெள்ளையானை' போல உருவெடுத்திருப்பதாகவும், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் விஜயபாலமெண்டிஸ் கூறியுள்ளார்

புகையிரதப் பகுதி ஊழியர்களின் இருபத்து நான்காவது மநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் புகையிரதப் பகுதி நிர்வாகம் நூற்றி இருபத்தைந்து ஆண்டு காலப் பழைமை வாய்ந்ததாகவும், அன்றைய காலனித்துவ ஆட்சியின் இறுக்கமான சட்டதிட்டங்களையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே தான் புகையிரதப் பகுதியை அதிகார சபையாக மாற்றத் திட்டமிட்டிருப்பதாகவும், இதன் மூலம் இப்பகுதியில் கடமையாற்றும் இருபத்து மூவாயிரம் ஊழியர்களும் நன்மை பெறுவர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இறுக்கமான அரசடிமை முறை என்பது சிறிலங்காவில் மட்டுமல்ல சோசலிச நாடுகளில் கூட தோல்வி கண்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

## கைத்தொழில் முயற்சிகள்

முல்லைத்தீவுமாவட்டத்தில் பல கைத்தொழில் முயற்சிகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கபபட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன புதுக்குடியிருப்பில் வேப்பெண்ணெய் ஆலையும்.ஒட்டிசுட்டானில் பால் வெல்ல உற்பத்தியும்.பாய் தறி ஆலையும், கயிறு துப்புத்தடி தயாரிக்கும் தும்புஆலையும் தற்போது இயங்கிவருகின்றன.இத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படடுள்ளதையடுத்து இங்கு பலர் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்த பயிற்சிக் கருத்தரங்குகளை யாழ். கல்வித்திணைக்களத்தின் முகா

## வெளிநாட்டு பத்திரிகையாளர் ஆட்சேபனை

ஏ. எவ். பி செய்தி நிறுவனத்தின் படப்பிடிபபாளர் சேனவிதாரண தாக்சப்பட்டமை குறித்து வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சங்கம் ஆடசேபனை தெரிவித்துள்ளது. எதிர்கட்சிகள் ஒழுங்கு செய்த கதிர்காமம் நோக்கிச் சென்ற பாதயாத்திரையின் போது படப்பிடிப் பாளரான ஏ. எவ். பி செய்தி நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் சேனவிதாரண தாக்கப்பட்டமை தெரிந்ததே.

## காங்கேசன்துறை விளையாட்டுக் கழகஅணிவெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகததினால் நடாத்தப்பட்டு வரும் 73 ஆவது சுதேசியத் திருநாள் விளையாட்டுப் போட்டிகள் கடந்த இரண்டு வார காலமாக அரியாலையில் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டித் தொடரில் ஓர் அங்கமாக சரஸ்வதி ச. ச. நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற செற் அப் முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை மூன்று நேர் செற்றுக்களில் 15 - 11 15 - 11, 15 - 8 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது (42)

## ஆயுதம் தாங்கிய கோஷ்டி தெஹிவளையில் கொள்ளை

(கொழும்பு)

தெஹிவளை ஹில் வீதியிலுள்ள நகைக்கடையொன்றை ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

ஹெல்மட் அணிந்திருந்த இக் கொள்ளையர்கள் கடைச் சிப்பந்தியை கத்தியால் குத்தி விட்டு ஏனையோரையும் தாக்கி விட்டு சுமார் ஐந்து இலட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

# தமிழகத்தைச் சேர்ந்தோருக்கு தமிழகத்தில் ஆயுதபயிற்சியாம்

(சென்னை)

தமிழகத்தைச் சேர்ந்த சிலருக்கு தமிழகத்திலேயே ஆயுத பயிற்சி அளிக்கப்படுவதாக தகவல் கிடைத்திருக்கின்றது என தமிழ்நாடு காவல்துறை

ஈடுபடுவதற்கென இப் பயிற்சி வழங்கப்படுவது தெரியவந்திருப்பதாகவும், அதனைத் தடுக்க அரசு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் இராமநாதபுரம்

இலங்கையிலேச தீவிரவாத செயல்களில் ஈடுபடவுள்ளனர் என்று செய்தியாளர் கேட்ட போது அதுபற்றி நிச்சயமாகச் சொல்லமுடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# ஐ. ஐ. தேசிய முன்னணி ஐ. தே. க. வின் காபன்பிரதி அல்ல

(காலி)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கியதேசியக் கட்சியின் காபன் பிரதி அல்ல, இது பழைய ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளையே பின்பற்றி வருகிறது. தற்போதைய தேவைக்கு ஏற்ப கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு ஜனநாயக ஐ தே. முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில்,ஒருவரான லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசிய லலித் அத்துலத்முதலி இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது;

நானும் ஏனையவர்களும் பதவி துறந்த பின்னர் ஐ. தே. க. எம் மீது பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை தெரிவித்தது. சேறு பூசும் சுவரொட்டிகள் நாடு பூராவும் ஒட்டப்பட்டன.

நாங்கள் பதவிக்கு வந்ததும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைதானா என்பதை விசாரிக்க முதல் வேலையாக ஆணைக்குழு ஒன்றை நியமிப்போம்.

ஆட்சியாளரின் கோரிக்கைகளுக்காக பெருமளவில் பொதுப்பணம் செலவிடப்படுகிறது. இதனால் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கிறது. அத்தியாவசியப்பொருள்களின் விலை மேலும் மேலும் அதிகரித்துச் செல்கிறது அவை சந்தையில் கிடைக்கவில்லை என்பதனால் அல்ல, மாறாக அரசு பண நோட்டுக்களை அச்சிடுவதால்.

இன்றைய அரசில் படித்தவர்களுக்கும், நேர்மையானவர்களுக்கும் இடமில்லை எமது முன்னணி உண்மையான ஜனநாயக ஆட்சிக்காக போராடும் என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர்கள் ஐ.தே. க.வில் இருக்க முடியாது ஏனென்றால் இலங்கை படைகளை தாக்கவும் நாட்டைப் பிரிக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் இன்றைய ஐ தே.க. அரசே வழங்கியிருக்கிறது.

வடக்கிலும், கிழக்கிலும் ஆயுதப்படையில் எவராவது கொல்லப்பட்டால் ஐ.தே.க. அரசுதான் பொறுப்புஎன்றும் குறிப்பிட்டார்.

## பாக்குநீரிணையில் மீன்பிடிக்கும் படகுகளை பதிவு செய்ய இந்தியா-சிறிலங். இணக்கம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாக்குநீரிணைப் பகுதியில் மீன் பிடிக்கும் படகுகள் அனைத்தையும் பதிவு செய்து கொள்வது என இருநாட்டு சுங்கப் பகுதி அதிகாரிகள் கலந்து கொண்டு கொழும்பில் நடந்த பேச்சு வார்த்தையில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இரு நாடுகளையும் சேர்ந்த கடத்தல் சந்தேக நபர்களின் புகைப்படங்களையும் பரிமாறிக்கொள்வது எனவும் இரு நாட்டு அதிகாரிகள் இணக்கம் கண்டுள்ளனர்.

## தவணை விடுமுறைகள்; கல்விப் பணிப். அறிவிப்பு

யாழ். மாவட்டபாடசாலைகளின் முதலாந் தவணை விடுமுறை நாட்கள் தொடர்பாக கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். இந்த அறிவித்தலில் இற்றைவரை 1ஆம் தவணைப் பரீட்சையை நடாத்தி தேர்ச்சி அறிக்கைகளைக் கொடுத்த பாடசாலைகள் 06 ஆம் திகதி திங்கட்கிழமை மூடி மீண்டும் இரண்டாம் தவணைக்காக இம்மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்தல் வேண்டும்.

இதுவரை 1ஆம் தவணைப் பரீட்சைகளை நடாத்தி முடிக்காத பாடசாலைகள் பரீட்சைகளை நடாத்தி தேர்ச்சி அறிக்கைகளை வழங்கி 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறைக்காக மூடி மே மாதம் 04 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்தல் வேண்டும்.

தற்பொழுது க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைகள்நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாடசாலைகளும் மே மாதம் 04 ஆம்திகதிதிங்கட்கிழமையே தொடங்குவதுடன் முதலாம் தவணையில்இழந்தநாட்களை ஈடுசெய்யும் முகமாக மேலதிக நாட்களை விடுமுறை நாட்களில் பாடசாலைகளை நடத்துவதன் மூலம் ஈடுசெய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சிகளின் கெட்டகாலம் கழிகிறது

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளுக்கு நல்ல காலம் ஆரம்பிக்கவில்லை என்றாலும்,கெட்டகாலம் கழிந்து கொண்டு வருகின்றது என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்க் கட்சிகளின் கூட்டு பலமாக இல்லாத போதிலும் ஓரளவில் கொள்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்கிறது. ஆரம்பத்தில் சிறு தொகை மக்களுடன் ஆரம்பித்த எதிர்க்கட்சிகளின் பாதயாத்திரை கடைசியில் திஸமகாராம முதல் கதிர்காமம் வரையிலான 11 மைல் தூரத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு

தொழில் துறைக்கு மாதந்தோறும் 400 மில்லியன் ரூபாவை (10 மில்லியன் அமெரிக்க டாலர்] இந்த இரு வங்கிகளும் செலவிட்டு வருவதாகக் கணக்காய்வுகள் தெரிவிக்கின்

## அத்துலத் முதலியின் கூட்டம் குழப்பப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்துலத் முதலியின் பொதுக்கூட்டம் குழப்பப்பட்டது.

இலக்கத்தகடில்லாத வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்

மாகத் தாக்கப்பட்டார்கள்.

கூட்ட அமைப்பாளர் வீட்டினுள் நுழைந்த இக் கோஷ்டி தளபாடச் சாமான்களை அடித்து நொருக்கியது.கூட்ட அமைப்பாளரின் மனைவியும் தாக்கப்பட்டு கலுபோவில

## ...ருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்த பயிற்சிக் கருத்தரங்குகளை யாழ். கல்வித்திணைக்களத்தின் முகாமைத்துவ நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

எதிர்வரும் 11, 12 16 17 18 ஆகிய திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் கல்வி மான்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஈ)

## பரீட்சைப் பெறுபேறு

(கொழும்பு)

க. பொ. த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளில் வடமாகாணத்திற்குரிய பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று கொழும்பில் வெளியிடப்பட்ட க. பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் படி சுமார் அறுபத்து தாறாயிரம் மாணவர்கள் உயர்தரக் கல்வி பெறத் தகுதிபெற்றுள்ளனர் எனததெரிகின்றது.

(சென்னை)

தமிழகத்தைச் சேர்ந்த சிலருக்கு தமிழகத்திலேயே ஆயுத பயிற்சி அளிக்கப்படுவதாக தகவல் கிடைத்திருக்கின்றது என தமிழ்நாடு காவல்துறை உயர் அதிகாரிகளில் ஒருவரான வால்டர் தேவாரம் கூறியுள்ளார். தமிழ் மறுமலர்ச்சி முன்னணி என்றபெயரில் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்கென இப் பயிற்சி வழங்கப்படுவது தெரியவந்திருப்பதாகவும், அதனைத் தடுக்க அரசு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அவர் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

இப் பயிற்சியைப் பெறுபவர்கள் தமிழ்நாட்டிலோ அல்லது இலங்கையிலோ தீவிரவாத செயல்களில் ஈடுபடவுள்ளனர் என்று செய்தியாளர் கேட்டபோது அதுபற்றி நிச்சயமாகச் சொல்லமுடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## இஸ்ரேல்

# பெற்றியாட் ரகசியங்களை சீனாவிற்கு விற்கவில்லை

### அமெரிக்கா கருத்து

(வாஷிங்டன்)

சீனாவிற்கு பெற்றியாட்ரக ஏவுகணைகளையும்அவற்றைத் தயாரிக்கும் நுட்பத்தையும் இஸ்ரேல் விற்றதாக கூறப்பட்ட குற்றச்சாட்டை அமெரிக்கா நிராகரித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று பதினேழு உறுப்பினர் உண்மை அறியும் குழு பரிந்துரைத்திருப்பதாகவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தப் பிரச்சினையில் அமெரிக்க வெளியுறவுத் துறைமேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் வெளியுறவு அமைச்சகத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தனியாக நடத்திய ஒரு புலன் விசாரணையின் மூலம் அமெரிக்காவின் மற்ற ஆயுதங்களையும், ஆயுத தொழில் நுட்பங்களையும் மூன்றாவது உலக நாடுகளுக்கு இஸ்ரேல் தந்திருக்கிறது என்பதை புலப்படுத்தியிருக்கிறார்.

### பயிற்சி

கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்று மேற்படி கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. கூட்ட அறிக்கையின் பிரதி வடக்கு - கிழக்கு பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### புலிகள்

ஒப்பரேசன் பிளாக்பொக்ஸ் (கறுப்பு நரி) எனப் பெயரிட்டுள்ளனர்.

இதேவேளை இவ் இராணுவ நடவடிக்கையில் பங்குபற்ற 2000 மேலதிக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஓர் அதிகாரி தெரிவித்துள்ளார்

## அறிமுகமும் ஆய்வரங்கமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் என்னும் நூலின் அறிமுகமும் ஆய்வரங்கமும் இன்று பிற்பகல் நான்குமணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவருக்கும் அழைப்பு விடப்பட்டு உள்ளது.

## வெள்ளி விழா மலர் வெளியீடு

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை மூன்று மணியளவில் பாலர் கல்விக் கழகத்தின் வெள்ளிவிழா மலர் வெளியிடப்படவுள்ளது ஆ. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் சு. டி வகலாலா பங்குபற்றவுள்ளார். இம்மலரின் வெளியீட்டுரையை கலாநிதி சபா. ஜெயராசாவும், ஆய்வுரையை கலாநிதி அ. சண்முகதாசும் வழங்கவுள்ளனர்.

### செயலகத்

இங்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தீவகத்தை சார்ந்த சகல நிறுவனங்களினதும் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

### கட்சி

டனான பேச்சுக்களின் முடிவில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைத் திட்டமொன்று வரையப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

### வடக்கு

தொழில் துறைக்கு மாதந்தோறும் 400 மில்லியன் ரூபாவை (10 மில்லியன் அமெரிக்க டாலர்] இந்த இரு வங்கிகளும் செலவிட்டு வருவதாகக் கணக்காய்வுகள் தெரிவிக்கின்றன.

தோட்டத் தொழில்துறை சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது. தோட்டத்தொழில்துறை இவ் வருட ஆரம்பத்தில் தனியார் துறைக்கு விற்கப்பட இருக்கிறது.

இந்திய தனியார்துறை இத் தோட்டங்களை வாங்கிவிடும் இந்திய ஆக்கிரமிப்பு இங்கு ஏற்பட்டுவிடுமென ஒருசாரார் எதிர்ப்புக்களை எழுப்பியதன் விளைவாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தோட்டங்களை விற்பனை செய்யக்கூடாதென அரசாங்கம் தடை விதித்துள்ளது: இதனால் அனைத்துலக நிறுவனங்கள் பல ஏமாற்றம் அடைந்துள்ளன, வெளிநாட்டு தொழில்நுட்பமும் வெளிநாட்டு நிதிவசதிகளும் சிறிலங்காவின் தோட்டத்துறைக்கு கிடையாமல் போய்விட்டதென உலக வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன;

போருக்கான செலவினங்களை இப்போதைக்கு குறைக்க முடியாது. எனவே வேறுதுறைகளில் செலவினங்களை கட்டுப்படுத்திபணத்தை மிச்சப்படுத்த வேண்டும். அல்லது வருமானத்தைக் கூட்டவேண்டும்.

கடந்த மாதம் இறக்குமதிக்கான சுங்கவரிகள் பலஅதிகரிக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள் தான் வெளிநாட்டு மூலதனம் அதிகரித்தால்பொருளாதாரப் பிரச்சினைகள் தீர வாய்ப்பிருக்கிறது.ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் போர் நடக்கும் வரை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

போர் நீடிக்கும்வரை பொருளாதார பிரச்சினைகளும் நீடிக்கத்தான் போகின்றன. இவ்வாறு பி.பி.சி. செய்தி முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கமும் அனைத்துலக நாணய நிறுவனமும் கடந்த வருடம் கைச்சாத்திட்டஉடன் படிக்கைகளின்படி அடுத்த மூன்று வருட காலத்திற்கு சுமார் 450 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனுதவி சிறிலங்காவிற்கு வழங்கப்படவுள்ளது.

இப்பணத்தின் இரண்டாவது தொகுதி இம்மாத இறுதியில் வழங்கப்பட முன்னர் ஐ.எம். எவ் நிறுவனத்தின் குழு ஒன்று சிறிலங்காவிற்கு விஜயம் செய்து சிறிலங்காவின் தற்போதைய பொருளாதார நிலையை பரிசீலனை செய்ய இருக்கிறது என பி. பி சி. தெரிவித்தது

## கூட்டம் குழப்பப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்துலத்முதலியின் பொதுக்கூட்டம் குழப்பப்பட்டது.

இலக்கத்தகடில்லாத வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களே கூட்டத்தைக் குழப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேடை உடைக்கப்பட்டு, கூட்டத்தில் நின்ற அத்துலத்முதலியின் ஆதரவாளர்களும் பலமாகத் தாக்கப்பட்டார்கள்.

கூட்ட அமைப்பாளர் வீட்டினுள் நுழைந்த இக் கோஷ்டி தளபாடச் சாமான்களை அடித்து நொருக்கியது. கூட்ட அமைப்பாளரின் மனைவியும் தாக்கப்பட்டு கலுபோவில ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### தேர்தல்

அச்சுறுத்தப் பட்டதற்கும் அரசினால்அமைக்கப்பட்டஒரு குழுவே காரணம் என்று அந்த அதிகாரி குற்றம்சாட்டியுள்ளார். இந்தக் குழு இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் சென்றே குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அவர் தமது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தஇளைப்பாறியபொலிஸ் அதிகாரியின்பெயரை மனித உரிமைகள் அமைப்புவெளியிடவில்லை. இந்த அதிகாரி யார் என்பது குறித்த விசாரணையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


கப்டன் அலெக்ஸ் ஞாபகார்த்த வெள்ளிக்கிண்ண கரப்பந்தாட்ட

சுற்றுப் போட்டி

இடம்:

முடமாவடி ஞானவைரவர் சனசமூகநிலைய மைதானம்

குறிப்பு : இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் சழகங்கள் நிலையத்தலைவர் செ. தர்மராஜாவுடன் 14-04-92 க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்

செயலாளர்

(2418) ஞானவைரவர் ச. ச. நிலையம்


## மரண அறிவித்தல்

### திரு: நா. தில்லைநடராசா

(இளைப்பாறிய எழுதுவினைஞர் தேர்தல் அலுவலகம், யாழ்ப்பணம்)

திரு.நா. தில்லைநடராசா [இளைப்பாறிய எழுதுவினைஞர் தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்] சனிக்கிழமை (04 - 04 - 92) காலமானார். இவர் தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், பரராசசிங்கத்தின் (திருக்கோணமலை) சகோதரனும், கௌரியம்பாள், சுமதி, கேதீஸ்வரி [பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவி], அமுதா, கௌரிமோகன் ஆகியோரின் தந்தையாரும், ஸ்ரீபன்சன் ஜேரசப்[மேற்கு ஜேர்மனி] யின் மாமனாரும், தர்சினி, ரூபனின் பேரனும், உமாபதிசிவம், சண்முகபாரதி[தெற்குஆபிரிக்கா] ஆகியோரின் மைத்துனரும், கனகசபையின் பெறாமகனும் ஆவார். இவரின் இறுதிச் சடங்குகள் கட்டைப்பராய் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

திருமதி த. தில்லைநடராசா [மனைவி]

[சி/4225]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மங்கநதிரா வது, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது